# आत्मनिर्भर भारत

## பகுதி-5 : அரசின் சீர்திருத்தங்களும், பயன்படுத்த வாய்ப்புள்ளோரும் 17.05.2020

Gov ernment Of India
सत्यमेव जयते



## கோவிட் கட்டுப்படுத்தலில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகள்.

**ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவை - ரூ .15, 000கோடி**

- மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டது - ரூ.4113 கோடி
- அத்தியாவசியப் பொருள்கள் - ரூ.3750 கோடி
- மருத்துவப் பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் உபகரணத் தொகுப்புகள் - ரூ.550 கோடி
- பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ் சுகாதார அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.50 லட்சத்துக்கு மருத்துவக் காப்பீடு

**தகவல் தொழில்நுட்பத்தை சாதகமாக்கிய பயன்பாடு-**

- இ-சஞ்சீவனி தொலைநிலை ஆலோசனை சேவைகள் தொடக்கம்
- திறன் வளர்ப்பு: இணையவழி கற்றல் தொகுப்புகள் - iGOT தளத்தில்
- ஆரோக்கிய சேது: சுய மதிப்பீடு மற்றும் தொடர்புத் தடமறிதல்

**சுகாதார அலுவலர்களுக்குப் பாதுகாப்பு-**

- கொள்ளைநோய்கள் சட்டத்தில் திருத்தம்
- தனி நபர் பாதுகாப்பு உபகரணங்களுக்குப் (PPE) போதிய ஒதுக்கீடு
    - பூஜ்யத்தில் இருந்து >300 உள்நாட்டு உற்பத்தியாளர்கள்
    - ஏற்கெனவே வழங்கப்பட்டவை - தனி நபர் பாதுகாப்பு உபகரணங்கள் ( 51லட்சம்), N95 முகக் கவச உறைகள் ( 87லட்சம்), ஹைடிரோ குளோரோ குவின் மாத்திரைகள் (11. 08 கோடி)



# தொழில் செய்வதை எளிமைப்படுத்த ஆளுகை சீர்திருத்தங்கள்

- சர்வதேச அளவில், ஒரு நாட்டின் தொழில் செய்யும் அறிக்கையை (DBR) முதலீடு செய்யும் எண்ணமிருப்பவர்கள் பார்ப்பார்கள்.
- தொடர் முயற்சிகள் மூலம் உலக வங்கியின் தொழில் செய்யும் அறிக்கையில் 2014இல் 142 ஆக இருந்த இந்தியாவின் இடம், 2019இல் 63 ஆக உயர்ந்துள்ளது.
- அனுமதிகள் மற்றும் ஒப்புதல் அளித்தல், சுய-சான்று மற்றும் மூன்றாம் நபர் சான்று ஆகிய ஒழுங்குப்படுத்துதல் செயல்முறைகளை இது உள்ளடக்கும்.
- தொழில் செய்வதற்கு மிகவும் சுலபமான நாடுகளில் ஒன்றாக இந்தியாவை ஆக்க, எளிய முறையில் சொத்துப் பதிவு, வணிகத் தகராறுகளை விரைவாக முடித்து வைத்தல் மற்றும் எளிய வரி விதித்தல் தொடர்பான தொழில் செய்வதை எளிமைப்படுத்தும் சீர்திருத்தங்களின் அடுத்தக் கட்டத்தின் மீது அரசு முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறது.



# தொழில் செய்வதை சுலபமாக்கும் செயல்பாடுகளை ஊக்குவிக்க சமீபத்திய பெருநிறுவன சட்ட நடவடிக்கைகள்

- 2018இல் நிறுவன சட்ட வழுவுதல்களைக் குற்றமற்றதாக்கும் முதல் கட்டமாக, 16 கூட்டுக் குற்றங்கள் அபராத செயல்முறையில் இருந்து உட்புறத் தீர்ப்புக்கு மாற்றப்பட்டன.
- நிறுவனத்தைத் தொடங்க ஒருங்கிணைந்த இணையம் சார்ந்த படிவம் - நிறுவனத்தைத் தொடங்க எளிமையாக்கப்பட்ட மின்னணு படிவம் (SPICe +) அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரே படிவம் மூலம் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசின் 10 சேவைகள் அளிக்கப்படுகின்றன.
- சுதந்திரமான இயக்குநர்களுக்கான தகவல் வங்கித் தொடங்கப்பட்டது.
- நிறுவனங்கள் சட்டம், 2013இன் கீழ் 14,000க்கும் அதிகமான வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.



# தொழில்செய்வதை எளிதாக்கும் வகையில் நிறுவனங்கள் சட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- **இரு தரப்பினருக்கு இடையேயான பரிமாற்றம் தொடர்பான வழிமுறைகளை சீராக்குதல்.**
- **கோவிட்-19 சமயத்தில், நிறுவனங்கள் சட்டம், 2013-இல் உள்ள பல்வேறு வழிமுறைகளின்கீழ், செயல்படுவதால் ஏற்படும் சுமைகளைக் குறைக்கும் வகையில், உரிய நேரத்தில் நடவடிக்கை.** மற்றும், நிறுவனத்தின் வாரியக் கூட்டங்கள், அரிதாக நடத்தப்படும் பொதுக்குழுக் கூட்டங்கள், வருடாந்திரப் பொதுக்குழுக் கூட்டங்கள், வாரியக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கும், உரிம விவகாரங்களுக்குத் தீர்வுகாணவும் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் பலனை அதிக அளவில் பயன்படுத்துதல்.
- **திவாலாதல் மற்றும் கடன்மீட்பு விதிகள், 2016 அமல்படுத்தப்பட்டது முதலே, 221 வழக்குகளுக்கு தீர்வுகாணப்பட்டு, 44 சதவீதம் மீட்கப்பட்டுள்ளது**
    - அ. ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை ரூ.4.13 லட்சம் கோடிகள்
    - ஆ. பெறப்பட்ட தொகை ரூ.1.84 லட்சம் கோடிகள்

- திவாலாதல் மற்றும் கடன் மீட்பு வழிமுறைகளின் கீழ், பிப்ரவரி 29, 2020 வரை, **வழக்குகள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே, ரூ.5.01 லட்சம் கோடி (தோராயமாக) அளவுக்கான 13,566 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.**



# தொழில்நுட்ப உதவியுடனான முறைகள் - கோவிட் காலத்தின்போது ஆன்லைன் கல்வி.

- ஸ்வயம்பிரபா டிடிஹெச் )DTH (சேனல்கள், இன்டர்நெட் வசதி இல்லாதவர்களையும் சென்றடைந்து உதவும். ஏற்கனவே மூன்று சேனல்கள் பள்ளி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது மேலும் 12 சேனல்கள் கூடுதலாக ஒதுக்கப்படும்.
- கல்வி நிபுணர்களுடன் நேரலை கலந்துரையாடல் தொடர்கள், ஸ்கைப் மூலமாக ஒளிபரப்பப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- கல்வி தொடர்பான வீடியோக்கள் மேலும் பலரையும் சென்றடையும் வகையில் கல்வி வீடியோக்கள் ஒளிபரப்பப்படுவதற்காக, டாட்டா ஸ்கை, ஏர்டெல் போன்ற தனியார் டிடிஎச் ஆபரேட்டர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.
- ஸ்வயம்பிரபா சேனல்களில் கல்வி தொடர்பான விஷயங்களை ஒளிபரப்புவதற்காக ஸ்வயம்பிரபா சேனல்களின் ஒளிபரப்பு நேரம் (நாள்தோறும் நான்கு மணி நேரம்) இந்திய மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 24 மார்ச் 2020 முதல் இதுவரை தீக்ஷா இணையதளத்திற்கு 60 கோடி பேர் வருகை தந்துள்ளனர்.
- இ-பாடசாலை (e-Paatshaala) திட்டத்தில் 200 புதிய பாடப்புத்தகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.





# அரசின் சீர்திருத்தங்களும், பயன்படுத்த வாய்ப்புள்ளோரும்

सत्यमेव जयते
Goverment Of India



**வேலைவாய்ப்பை ஊக்குவிக்க ,மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்துக்கு ) MGNREGS) ஒதுக்கீடு ரூ .40, 000கோடி அதிகரிப்பு.**

- **மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்துக்கு** அரசு கூடுதலாக ரூ .40, 000 கோடி ஒதுக்கீடு செய்யும்.
- மொத்தமாக 300 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்க இது உதவிகரமாக இருக்கும்.
- புலம்பெயர்ந்து சென்று திரும்பி வந்தவர்கள் உள்ளிட்டோருக்கு மழைக்காலத்திலும் அதிக வேலை தர வேண்டிய தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
- நீடித்த பயன்தருவதான மற்றும் வாழ்வாதார சொத்துக்கள் பெருமளவு உருவாக்கப்படும் .தண்ணீர் சேமிப்பு சொத்துகளை உருவாக்குதலும் இதில் அடங்கும்.
- அதிக உற்பத்தி மூலம் கிராமப்புறப் பொருளாதாரத்துக்கு உத்வேகம் ஊட்டும்.



# சுகாதார சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள்:

பொது சுகாதாரத்தில் அதிகரிக்கப்பட்ட முதலீடுகள் -

- சுகாதாரத்தின் மீதான பொது செலவினங்கள் அதிகரிக்கப்படும்.
- அடித்தள சுகாதார நிறுவனங்களில் முதலீடுகள்.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதார மற்றும் நல மையங்களை அதிகரித்தல்.
- எத்தகைய வருங்கால பெருந்தொற்றுக்கும் இந்தியாவைத் தயார்படுத்துதல் -
- தொற்று நோய் மருத்துவமனை வளாகங்கள் - அனைத்து மாவட்டங்களிலும்.
- ஆய்வக வலைப்பின்னல் மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்துதல் -
- அனைத்து மாவட்டங்கள், வட்டார அளவில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள்.
- பெருந்தொற்றுக்களைக் கையாள ஆய்வகங்கள், பொது சுகாதார மையம்.
- ஆராய்ச்சியை ஊக்குவித்தல் - அனைத்து மாவட்டங்கள், வட்டார அளவில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள். பெருந்தொற்றுக்களைக் கையாள ஆய்வகங்கள், பொது சுகாதார மையம்
- ஆராய்ச்சியை ஊக்குவித்தல் - இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் ஒருங்கிணைந்த சுகாதாரத்துக்காக தேசிய நிறுவன தளம்.



## கோவிட் பாதிப்புக்குப் பிந்தைய காலத்தில் சமத்துவத்துடன் தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் கல்வி.

- **PM eVIDYA -** பல முனை அணுகுதல் வசதி கொண்ட டிஜிட்டல் / ஆன்லைன் கல்வித் திட்டம் உடனே தொடங்கப்படும் .அதில் பின்வரும் அம்சங்கள் இருக்கும்:
    - மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் பள்ளிக் கல்விக்கு DIKSHA : அனைத்து கிரேடுகளுக்கும் இ-பாடங்கள் மற்றும் QR குறியீட்டில் அறியும் பாடப் புத்தகங்கள் (**ஒரே நாடு, ஒரே டிஜிட்டல் தளம்**).
    - 1முதல் 12 ஆம் வகுப்பு வரையில் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி டி.வி .சேனல் (**ஒரே நாடு, ஒரே சேனல்**).
    - **வானொலி, சமுதாய வானொலி மற்றும் பாட்காஸ்ட்களை** தீவிரமாகப் பயன்படுத்துதல்.
    - **பார்வையற்ற மற்றும் செவித்திறனற்ற மாற்றுத் திறனாளிக்கு** விசேஷ **இ-பாடங்கள்.**
    - **உயர்நிலை வரிசையில் முதல் 100 இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள்** 2020 மே 30 தேதியில் இருந்து ஆன்லைன் கல்வித் திட்டங்கள் தொடங்க தானாகவே அனுமதிக்கப்படும்.
- **மனோதர்பன் -** மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மன ஆரோக்கியம், உணர்வுப்பூர்வமான ஆரோக்கியத்துக்கு உதவும் உளவியல் சார்ந்த சமூக உதவி அளிக்கும் திட்டம் தொடங்கப்படும்.
- **பள்ளிக்கூட, மழலைப் பருவக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு புதிய தேசிய பாடத் திட்டம் மற்றும் வழிகாட்டி வரையறை** வெளியிடப்படும்; உலகளாவிய மற்றும்21 வது நூற்றாண்டு தொழில் திறன் தேவைகளுடன் ஒருங்கிணைந்ததாக இது இருக்கும்.
- 2025க்குள் கிரேடு 5 முடிக்கும் மாணவர்கள் உரிய கற்றலைப் பெறுவதை உறுதி செய்ய **தேசிய அடிப்படை நிலை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு லட்சிய நோக்குத் திட்டம்** டிசம்பர்2020 க்குள் தொடங்கப்படும்.



# திவாலாதல் மற்றும் நொடிப்புநிலை விதிகள் தொடர்பான நடவடிக்கைகள் மூலம் தொழில் செய்வதை எளிதாக்குவதை மேலும் அதிகரிக்க நடவடிக்கை

Government Of India

- திவால் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான குறைந்தபட்ச வரம்பு ரூ.1 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது (ரூ.1 லட்சத்திலிருந்து அதிகரிப்பு, பெரும்பாலும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மீட்கப்படுகின்றன).

- சட்டத்தின்பிரிவு 240ஏ-வின் கீழ், **சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கான சிறப்பு திவால் தீர்வு வழிமுறைகள்**, விரைவில் அறிவிக்கப்படும்.

- நோய்த் தொற்றுச் சூழல் அடிப்படையில், **புதிதாக திவால் நடவடிக்கைகளைத் தொடங்கும் பணிகள் ஓராண்டுவரை நிறுத்திவைப்பு.**

- திவால் விதியின்கீழ், திவால் நடவடிக்கைகளைத் தொடங்குவதில், **பணத்தைத் திரும்பச் செலுத்தாதது தொடர்பான வரைமுறையில் கோவிட்-19 காரணமாகப் பெறப்படும் கடனுக்கு விலக்கு அளிப்பது குறித்து முடிவெடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம்.**

# நிறுவன சட்ட வழுவதல்களை குற்றமற்றதாக்குதல்

- சிறிய தொழில்நுட்ப மற்றும் செயல்முறை வழுவதல்கள் (பெருநிறுவன சமூகக் கடமைகளைப் பற்றிய தகவல் அறிக்கையில் குறைபாடுகள், இயக்குநர்கள் குழு தகவல் அறிக்கையில் போதாமை, வழுவதல்களைத் தாக்கல் செய்தல், ஆண்டுப் பொதுக்குழுக்கூட்டம் நடத்துவதில் தாமதம்) தொடர்புடைய விதிமீறல்களை, நிறுவன சட்ட வழுவதல்களை குற்றமற்றதாக்குதல்.
- இசைந்துத் தீர்க்கக்கூடிய பெருவாரியான குற்றப் பிரிவுகள் உட்புறத் தீர்ப்பு செயல்முறைக்கு மாற்றப்படும். இசைந்து தீர்க்கக்கூடிய விஷயங்களில் பிராந்திய இயக்குநரின் அதிகாரங்கள் அதிகரிப்பு (முன்னர் 18 பிரிவுகளே இருந்த நிலையில், தற்போது 58 பிரிவுகள் உட்புறத் தீர்ப்பு செயல்முறை மூலம் கையாளப்படும்).
- குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் சுமைகளை இந்த சட்டத் திருத்தங்கள் குறைக்கும்.
- இசைந்துத் தீர்க்கக்கூடிய 7 குற்றங்கள் மொத்தமாகக் கைவிடப்பட்டன, மாற்றுக் கட்டமைப்பின் கீழ் 5 குற்றங்கள் கையாளப்படும்.

सत्यमेव जयते
Goverment Of India

## கார்ப்பரேட்கள் தொழில் செய்வதை எளிமையாக்குதல்

- **`தொழில் தொடங்குதல்' மற்றும் `திவால்நிலை பைசல்' தரநிலைப்படுத்தலில் மேம்பாடு செய்ததால் ,**இந்தியாவில் எளிதில் தொழில் செய்யும் நிலையைத் தரநிலைப்படுத்துவது மேம்பட்டிருக்கிறது.
- மற்ற **முக்கிய சீர்திருத்தங்களில்** பின்வருவன அடங்கும்-
    - இந்திய பொது நிறுவனங்கள் அனுமதிக்கப்படும் வெளிநாட்டு நீதிப் பரிபாலன எல்லைக்குள் செக்யூரிட்டிகளை நேரடியாகப் பட்டியலிடுதல்.
    - பங்குப் பரிவர்த்தனை மையங்களில் Non-convertible debentures - NCDகளில் பட்டியலிடும் தனியார் நிறுவனங்கள், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களாகக் கருதப்பட மாட்டாது.
    - கம்பெனிகள் சட்டம், 2013-இல் கம்பெனிகள் சட்டம், 1956Part IXA (உற்பத்தி நிறுவனங்கள்) அம்சம் சேர்ப்பு.
    - தேசிய கம்பெனி சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (NCLAT) விசேஷ அமர்வுகளை கூடுதலாக உருவாக்கும் அதிகாரம்.
    - சிறிய நிறுவனங்கள், ஒரு நபர் நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் , ஸ்டார் அப்களின் அனைத்து தவணை தவறுதல்களுக்கும் குறைவான அபராதங்கள்.



# புதிய, சுயசார்பு இந்தியாவுக்கான பொதுத்துறை நிறுவனங்கள் கொள்கை

Goverment Of India

கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவும், உலகமும் மாறியுள்ளன.

புதிய ஒத்திசைவுக் கொள்கை தேவைப்படுகிறது – இங்கு **அனைத்து துறைகளிலும் தனியார் துறைக்கு வாய்ப்பு, அதே நேரத்தில், குறிப்பிட்ட பகுதிகளில் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும்.**

- இதன்அடிப்படையில், புதிய கொள்கையை அரசு அறிவிக்கும், இதில்,
    - பொதுநலன் கருதி பொதுத்துறை நிறுவனங்கள் நடத்தும் முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.
    - முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில், **குறைந்தபட்சம் ஒரு நிறுவனம், பொதுத்துறையின் கீழ் இருக்கும். ஆனால், தனியார் துறையினரும் அனுமதிக்கப்படுவார்கள்.**
    - மற்ற துறைகளில், **பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படும்** (வாய்ப்புகள் போன்றவற்றின் அடிப்படையில் செயல்படுத்துவதற்கான காலம் இருக்கும்).
    - தேவையில்லாத நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும் வகையில், **முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை ஒன்று முதல் நான்கு வரை இருக்கும்; மற்றவை தனியார்மயமாக்கப்படும்/இணைக்கப்படும்/ மற்ற நிறுவனங்களின் கீழ் கொண்டுவரப்படும்.**

# மாநில அரசுகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆதரவு

सत्यमेव जयते
Goverment Of India

மாநில அரசுகளைப் போலவே மத்திய அரசும் பெரிய அளவில் வருவாய் இழப்பை சந்தித்துள்ளது.

- இருந்த போதிலும், உதவி தேவைப்படும் இந்த நேரத்தில், மாநில அரசுகளுக்கு தாராள ஆதரவை மத்திய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.
- நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடுகளில் இருந்து வரலாறு காணாத சரிவை உண்மையான வருவாய் அடைந்துள்ள நிலையிலும், நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடுகள் செல்லத்தக்கது என்பது போல வரிப் பகிர்வு (ரூ 466,038 கோடி) ஏப்ரலில் முழுமையாக வழங்கப்பட்டது.
- மத்திய அரசின் வளங்கள் கடும் அழுத்ததில் உள்ள போதும், வருவாய் இழப்பு மானியங்கள் (ரூ 12,390 கோடி) ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சரியான நேரத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டன.
- மாநிலப் பேரிடர் நிவாரண நிதி முன்பணம் (ரூ 11,092 கோடி) ஏப்ரல் முதல் வாரத்தில் வழங்கப்பட்டது.
- நேரடி கொவிட்-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சகத்தால் ரூ 4,113 கோடிகும் அதிகமான நிதி வழங்கப்பட்டது.
- மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று, இந்திய ரிசர்வ் வங்கி கீழ்கண்டவற்றை அதிகரித்துள்ளது:
- மாநிலங்களின் வழிகள் மற்றும் முறைகள் முன்பண அளவுகள் 60 சதவீதம் வரை.
- ஒரு மாநிலம் தொடர்ந்து மிகைப்பற்றில் இருக்கக்கூடிய காலம் 14 நாட்களில் இருந்து 21 நாட்கள்.
- ஒரு மாநிலம் ஒரு காலாண்டில் மிகைப்பற்றில் இருக்கக்கூடிய காலம் 32 நாட்களில் இருந்து 50 நாட்கள்.

# மாநில அரசுகளுக்கு ஆதரவு அளித்தல்

- 2020-21-ஆம் ஆண்டில் மாநிலங்கள் கடன் பெறுவதற்கான வரம்பு.
- ரூ.6.41 லட்சம் கோடியாக அறிவிக்கப்பட்டது, இது ஒட்டுமொத்த மாநில உற்பத்தியில் (GSDP) 3 சதவீதம் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.
- இதில் 75 சதவீதத் தொகை, மாநிலங்களுக்கு மார்ச் 2020-லேயே அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தும் காலத்தை மாநிலங்களே முடிவுசெய்ய வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கடன் அளவில் 14 சதவீதத்தை மட்டுமே மாநில அரசுகள் பெற்றுள்ளன. **அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 86 சதவீதம்அளவுக்கு இன்னும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன.**
- இருப்பினும், கடன் வரம்பை சிறப்பினமாக 3 சதவீதத்திலிருந்து 5சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று மாநில அரசுகள் கோரிக்கை விடுத்துவருகின்றன.
- தற்போதைய எதிர்பாராத சூழலை கருத்தில் கொண்டு, **மாநில அரசுகளின் கோரிக்கையை ஏற்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. மாநிலங்கள் கடன் பெறுவதற்கான வரம்பு 3சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. இது 2020-21-ஆம் ஆண்டுக்கு மட்டுமே பொருந்தும்.**
- இதன்மூலம், மாநிலங்களுக்கு **கூடுதலாக ரூ.4.28 லட்சம் கோடி கிடைக்கும்.**

# மாநில அரசுகளுக்கு ஆதரவு, மாநில அளவிலான சீர்திருத்தங்களை ஊக்குவித்தல்.

सत्यमेव जयते
Goverment Of India

- கீழ்கண்டவற்றுக்காக கடன் வாங்குதலில் ஒரு பகுதி, குறிப்பிட்ட சீர்திருத்தங்களுடன் இணைக்கப்படும் (நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் உட்பட).
- எதிர்கால அதிக மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் குறைந்த பற்றாக்குறைகளின் மூலம் கூடுதல் கடனின் நிலைத்தன்மையை உறுதி செய்ய,
- புலம் பெயர்ந்தோரின் நலனை ஊக்குவிக்க மற்றும் உணவு விநியோகத்தின் கசிவுகளைக் குறைக்க,
- முதலீட்டின் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாவதை அதிகரிக்க.
- விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் அதே சமயத்தில், மின்சாரத் துறையை நிலைத்தன்மைப் பெறச்செய்ய, மற்றும்
- நகர்ப்புற வளர்ச்சி, ஆரோக்கியம், சுகாதாரத்தை ஊக்குவிக்க,
- 'ஒரே தேசம், ஒரே குடும்ப அட்டையை' நாடு முழுவதும் அமல்படுத்துதல், தொழில் செய்வதை சுலபமாக்குதல், மின்சார விநியோகம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆகிய நான்கு துறைகளில் சீர்திருத்த இணைப்பு இருக்கும்.
- செலவினங்கள் துறையால் கீழ்கண்ட முறையில் ஒரு குறிப்பிட்டத் திட்டம் அறிவிக்கப்படும்:
- 0.50 சதவீதம் நிபந்தனைகளற்ற அதிகரிப்பு.
- 0.25 சதவீதத்தின் நான்கு பகுதிகளில் 1சதவீதம், இதில் ஒவ்வொரு பகுதியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட, அளவிடக்கூடிய மற்றும் செயல்படுத்தக்கூடிய சீர்திருத்த நடவடிக்கைகளோடு இணைக்கப்பட்டிருக்கும்.
- நான்கு சீர்திருத்தத் துறைகளில் குறைந்தபட்சம் மூன்றிலாவது மைல்கற்கள் அடையப்பட்டிருந்தால் மேற்கொண்டு 50 சதவீதம்.

# முந்தைய நடவடிக்கைகளால் கிடைத்த ஊக்கம்

| வரிசை எண் | நடவடிக்கைகள் | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | 22 மார்ச் 2020 முதல் வரிச் சலுகைகள் காரணமாக ஏற்பட்ட வருவாய் இழப்பு | **7800** |
| 2 | பிரதமர் கரீப் கல்யாண் தொகுப்பு திட்ட ஒதுக்கீடு | **1,70,000** |
| 3 | சுகாதாரத்துறைக்கான பிரதமரின் அறிவிப்புகள் | **15,000** |
| | மொத்தம் | **1,92,800** |

# பகுதி -I அறிவிப்புகளில் அளிக்கப்பட்ட உத்வேகமளிக்கும் திட்டங்கள்

| வரிசை எண் | திட்ட விவரம் | (ரூ .கோடியில்) |
|---|---|---|
| 1 | எம்.எஸ்.எம்.இ.கள் உள்ளிட்ட தொழில்களுக்கு அவசரகால W/C ஏற்பாடு | **3,00,000** |
| 2 | நெருக்கடியில் உள்ள எம்.எஸ்.எம்.இ.களுக்கு துணைக் கடன் | **20,000** |
| 3 | எம்.எஸ்.எம்.இ.களுக்குக்கு நிதிகளுக்கான நிதியம் | **50,000** |
| 4 | தொழில் நிறுவனங்கள் & தொழிலாளர்களுக்கு ஈ.பி.எப் . ஆதரவு | **2800** |
| 5 | ஈ.பி.எப் .விகிதங்கள் குறைப்பு | **6750** |
| 6 | NBFC/HFC/MFIகளுக்கு சிறப்பு ரொக்கமாக்கல் திட்டம் | **30,000** |
| 7 | NBFC-கள் / MFI-களின் கடன்களுக்கு பகுதியளவு கடன் உத்தரவாதத் திட்டம்2 .0 | **45,000** |
| 8 | மின் விநியோக நிறுவனங்களுக்கு ரொக்க உதவி | **90,000** |
| 9 | TDS/TCS விகிதங்கள் குறைப்பு | **50,000** |
| | மொத்தம்... | **5,94,550** |

# பகுதி-2இல் உள்ள அறிவிப்புகளின் மூலம் வழங்கப்படும் ஊக்கிகள்

| வ. எண் | பொருள் | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 2 மாதங்களுக்கு இலவச உணவு தானிய விநியோகம் | **3500** |
| 2 | முத்ரா சிஷு கடன்களுக்கு வட்டி மானியம் | **1500** |
| 3 | சாலையோர வியாபாரிகளுக்கு சிறப்புக் கடன் வசதி | **400** |
| 4 | வீட்டு வசதி: கடனுடன் இணைக்கப்பட்ட வீட்டு வசதி மானியம்- நடுத்தர வருவாய்ப் பிரிவு | **70,000** |
| 5 | நபார்டு மூலம் கூடுதல் அவசரகாலப் பணி மூலதனம் | **30,000** |
| 6 | விவசாயக் கடன் அட்டை மூலம் கூடுதல் கடன் | **2,00,000** |
| | கூட்டுத்தொகை | **3,10,0000** |

# பகுதி-3 அறிவிப்புகளில் அளிக்கப்பட்ட உத்வேகமளிக்கும் திட்டங்கள்

| வ. எண் | திட்ட விவரம் | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | உணவு குறு தொழில் நிறுவனங்கள் | **10,000** |
| 2. | பிரதமரின் மத்ஸ்சய சம்பட யோஜ்னா | **20,000** |
| 3. | TOP முதல் TOTAL வரை: செயல்பாட்டுப் பசுமைகள் | **500** |
| 4. | வேளாண்மைக் கட்டமைப்பு நிதி | **1,00,000** |
| 5. | கால்நடை பராமரிப்புக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி | **15,000** |
| 6 | மூலிகை சாகுபடியை ஊக்குவித்தல் | **4,000** |
| 7 | தேனீ வளர்ப்பு முன்முயற்சி | **500** |
| | மொத்தம் | **1,50,000** |

# பகுதி-4 மற்றும் பகுதி-5இல் உள்ள அறிவிப்புகளின் மூலம் வழங்கப்படும் ஊக்கிகள்

| வ. எண் | பொருள் | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | நம்பகத்தன்மை இடைவெளி நிதி | **8,100** |
| 2 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டக் கூடுதல் ஒதுக்கீடு | **40,000** |
| | கூட்டுத்தொகை | **48,100** |

# ஆத்ம நிர்பார் பாரத் தொகுப்பின் கீழ் வழங்கப்படும் ஒட்டுமொத்த ஊக்கிகள்

सत्यमेव जयते
Goverment Of India

| வ. எண் | பொருள் | | (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| **1** | பகுதி 1 | | 5,94,550 |
| **2** | பகுதி 2 | | 3,10,000 |
| **3** | பகுதி 3 | | 1,50,000 |
| **4** | பகுதி 4 மற்றும் 5 | | 48,100 |
| | | கூட்டுத்தொகை | **11,02,650** |
| **5** | பிரதமரின் ஏழைகள் மறுவாழ்வுத் திட்டம் உட்பட | (முந்தைய நடவடிக்கைகள்) | 1,92,800 |
| **6** | இந்திய ரிசர்வ் வங்கி நடவடிக்கைகள் (நடைமுறையில் உள்ள) | | 8,01,603 |
| | | கூட்டுத்தொகை | **9,94,403** |
| | | ஒட்டுமொத்தக் கூட்டுத்தொகை | **20,97,053** |

सत्यमेव जयते
Goverment Of India

# நன்றி